# திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திரு. ஆ. தியாகராஜன், எம்.எஸ்ஸி., எம்.எட்.,

ப.மு.எண். 8798/அ1/2021, நாள். 25.10.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருவாரூர் மாவட்டம் – திருவாரூர் கல்வி மாவட்டம், திருவாஞ்சியம், அரசு மேல்நிலைப்பள்ளி – இளநிலை உதவியாளர் – திரு.ம.ரமேஷ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் சார்பு.

பார்வை :
1) அரசாணை எண். 101 பள்ளிக்கல்வித்துறை நாள் 18.05.2018.
2) திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 4353/அ1/2020 நாள். 18.09.2020
3) திருவாரூர் மாவட்டக்கல்வி அலுவலரின் கடித ந.க.எண். 4779/அ1/2021 நாள். 04.10.2021
4) திருவாஞ்சியம், அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியரின் கடித ந.க.எண்.158/2021 நாள்.21.09.2021.

-----

ஆணை:

பார்வை 2 இல் காணும் திருவாரூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV தேர்வு – 2018–2019 மற்றும் 2019–2020 தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு திருவாஞ்சியம் அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ம.ரமேஷ் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் 21.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. பணிவரன்முறை செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் மற்றும் பவானிசாகர் அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பணியாளரது பணிப்பதிவேடு பார்வைக்குப்பின் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

இணைப்பு – பணிப்பதிவேடு 1 தொகுதி

முதன்மைக் கல்வி அலுவலர்,
திருவாரூர்.

பெறுநர்:
திரு.ம.ரமேஷ்,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
திருவாஞ்சியம், திருவாரூர் கல்வி மாவட்டம்,
திருவாரூர் மாவட்டம்.( தலைமையாசிரியர் வழியாக)

நகல்:
1. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி , திருவாஞ்சியம், திருவாரூர் கல்வி மாவட்டம்
2. மாவட்டக்கல்வி அலுவலர், திருவாரூர்